
# ஒரு மதிப்பெண் வினாக்கள்




செ. முத்துசாமி.,எம்.,ஏ., பி.எட்.

**தொகுத்தவர்**

செ. முத்துசாமி.,எம்.,ஏ., பி.எட்.,

முதுகலைத்தமிழாசிரியர்,

ஜீ.ஆர் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி,

**முத்துநாயக்கன்பட்டி.**

**செல்பேசிஎண் : 9994966232**

# செய்யுள்

## இயல் - 1 என்னுயிர் என்பேன்

## [ யுகத்தின் பாடல்கள் ]

1) யுகத்தின் பாடல்கள் எனும் கவிதையின் ஆசிரியர் - **சு. வில்வரத்தினம்**

2) மனித இனத்தின் ஆதி அடையாளம் - **மொழி**

3) பண்பாட்டு பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவானவை **மொழி**

4) ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவது – **மொழி**

5) நான் இருப்பின் அடையாளம் - **மொழி**

6) சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை இடர் பலகளைந்து உயர்தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருப்பது – **தமிழ் மொழி**

7) கவிஞர் சு. வில்வரத்தினம் பிறந்த ஊர் - **யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத்தீவில்** பிறந்தவர்

8) சு.வில்வரத்தினத்தின் கவிதைகள் எத்தலைப்பில் 2001-இல் தொகுக்கப்பட்டது –**'உயிர்த்தெழும் காலத்துக்காக"**

9) கவிதை இயற்றுவது மட்டுமல்லாமல் பாடும் திறனும் கொண்டவர் யார் - **சு.வில்வரத்தினம்**

10) தன இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம், கூடில்லாத பறவையென்று கூறியவர் - **இரசூல்கம்சதோவ்**

11) சு.வி. என்று அழைக்கப்படுபவர் - **சு. வில்வரத்தினம்**

12) சு. வில்வரத்தினம் பிறந்த ஆண்டு – **1950**

13) இலங்கைத் தமிழ் எழுத்தாளர் - **சு. வில்வரத்தினம்**

14) ஈழத்தின் இலக்கியச் சிந்தனையாளர் - **மு. தளைய சிங்கம்**

15) மு. தளைய சிங்கம் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டுவர் - **சு. வில்வரத்தினம்**

16) தமிழ்ச் சங்கம் இருந்து அழிந்த இடம் - **கபாடபுரம்**

17) தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உறுதியான பற்றுக் கொண்ட கவிஞர் **-சு.வில்வரத்தினம்**

செ.முத்துசாமி.,எம்.ஏ.,பி.எட்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

18) தமிழ்த் தேசிய விடுதலைக்குத் தனது கவிதைகளில் முதன்மை இடம் கொடுத்தவர் -**சு.வில்வரத்தினம்**

19) தமிழ் விடுதலைப் புலிகளால் 'நாட்டுப்பற்றாளர்" விருது வாங்கியவர் - **சு.வில்வரத்தினம்**

20) சு. வில்வரத்தினம் இயற்றிய நூல்கள்:
**அகங்களும்முகங்களும்,வெளிக்கிராமம்,காலத்துர், நெற்றிமண்,உயிர்த்தெழும் காலத்துக்காக, வாசிகம்.**

21) சு. வில்வரத்தினம் இயற்கை எய்திய இடம் - **கொழும்பு**

22) சு. வில்வரத்தினம் இயற்கை எய்திய நாள் - **09.12.2006**

## நன்னூல் - பாயிரம்

23) நன்னூல் ஆசிரியர் - **பவணந்தி முனிவர்**

24) நூலைப் பிரித்து கொள்ளவும், அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும்உதவுவது – **பாயிரம்**

25) தமிழின் முதல் இலக்கண நூல் - **தொல்காப்பியம**

26) தொல்காப்பியத்தின் அமைப்பை எந்த நூலில் காணலாம் - **நன்னூல்**

27) தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் பின்பற்றி எழுதப்பட்ட நூல் - **நன்னூல்**

28) நன்னூல் பாயிரம் எத்தனை வகைப்படும் - **2 வகை**

29) நன்னூல் பாயிரம் - **1. பொதுப்பாயிரம் 2. சிறப்புப் பாயிரம்**

30) நன்னூலில் உனக்குப் பாடமாக அமைந்துள்ள நூற்பாக்கள் - **ஏழு**

31) பாயிரம் இல்லது **பனுவல்** அன்றே!

செ முத்துசாமி.எம்.ஏ., பி.எட்.

32) நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பு, அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும்தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது – **பாயிரமாகும்**

33) பாயிரத்திற்குரிய பெயர்கள் - **ஏழு**

**1. முகவுரை** **2. புதிகம்**
**3. அணிந்துரை** **4.புனைந்துரை** **5. நூல்முகம்**
**6. புறவுரை** **7. தந்துரை**

34) நூலுக்கு முன் சொல்லப்படுவது – **முகவுரை**

35) பலவகைப் பொருள்களைத் தொகுத்துச் சொல்வது – **பதிகம்**

36) நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது – **அணிந்துரை.புனைந்துரை**

37) நூலுக்கு முகம் போல் முற்பட்டிருப்பது – **நூன்முகம்**

38) நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்திலே தந்து சொல்வது -**புறவுரை**

39) நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது – **தந்துரை**

40) நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பித்தல் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறைஎன்னும் ஐந்தையும் கூறுவது – **பொதுப்பாயிரம்**

41) நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின்பெயர் கூறுவது – **சிறப்புப் பாயிரம்**

42) நன்னூல் முதல் பதிப்பு – **1834**

செ.முத்துசாமி.,எம்.ஏ.,பி.எட்.

43) தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்று சொல்வது **–யாப்புநூலில்** குறிப்பிடும் கருத்து, நூலைக் கேட்போர், நூலைக் கற்பதனால் பெறுகின்றபயன் ஆகிய எட்டுச் செய்திகளை செம்மையாகத் தெரிவிப்பது **–**

**சிறப்புப்பாயிரம்(நூற்பா வகை சார்ந்தது)**

44) நூல் இயற்றப்பட்ட காலம், அது அரங்கேற்றப்பட்ட அவைக்களம், அதுஇயற்றப்பட்டதற்கான காரணம் எனும் இம்மூன்றையும் சேர்த்து செல்வது - **சிறப்புப்பாயிரம்(நூற்பா வகை சார்ந்தது)**

45) ஆயிரம் முகத்தைப் பெற்றது போன்று பல்வேறு துறைச் செய்திகளை விரிவாகக்கூறினாலும் **பாயிரம் இல்லையேல்** அது சிறந்த நூலாக மதிக்கப்படாது

46) மகளிருக்கு அழகு தருவது – **அணிகலன்கள்**

47) எல்லா வகை நூல்களுக்கும் அழகு தருவது – **அணிந்துரை**

48) தொல்காப்பியத்தை முதல் நூலாக கொண்ட வழிநூல் - **நன்னூல்**

49) நன்னூல் காலம் - **கி.பி. 13-ஆம் நூற்றாண்டு**

50) நன்னூல் அதிகாரங்கள் - 2

1. **எழுத்ததிகாரம்**
2. **சொல்லதிகாரம்**

51) எழுத்ததிகாரம் எத்தனைப் பகுதிகள் - **5 பகுதிகள்**

1. **எழுத்தியல்**
2. **பதவியல்**
3. **உயிரீற்றுப்புணரியல்**
4. **மெய்யீற்றுப்புணரியல்**
5. **உரியியல்**

52) சொல்லதிகாரம் எத்தனைப் பகுதிகள் - **5 பகுதிகள்**

1. **பெயரியல்** 2. **வினையியல்** 3. **பொதுவியல**
4. **இடையியல்** 5. **உரியியல்**

53) பவணந்தி முனிவர் யார் கேட்டுக் கொண்டதால் நன்னூல் இயற்றினார் -**சீயகங்கன்(சிற்றரசர்)**

செ. முத்துசாமி. எம்.ஏ.,பி.எட்.

54) பவணந்தியாரின் உருவச் சிற்பம் எந்தக் கோயிலில் உள்ளது - **ஈரோடுமாவட்டம்,மேட்டுப்புதூர்** என்ற ஊரில் தீர்த்தங்கரரான சந்திரப்பிரபாவின் கோயிலில்உள்ளது

55) எல்லா வகை நூல்களுக்கும் அழகு தருவதாக வைக்கப்படுவது – **அணிந்துரை**

56) நூலை உருவாக்கும் ஆசிரியர் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும்தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றி பேசுவது **–பாயிரமாகும்.**

57) பாயிரத்தின்வேறு **(ஏழு)** பெயர்கள்:-

**1. முகவுரை 2. புறவுரை 3. பதிகம் 4. தந்துரை 5. நூன்முகம் 6. புனைந்துரை 7. அணிந்துரை**

58) பவணந்தி முனிவர் பிறந்த ஊர் - **சனகை (சனநாதபுரம்) (சனகாபுரம்)**

59) பவணந்தி முனிவரின் தந்தை – **சன்மதி முனிவர்**

60) பவணந்தியார் எந்த சமயத்தை சார்ந்தவர் - **சமணம்**

61) பவணந்தி முனிவரை ஆதரித்த அரசர் - **சீயகங்கன்**

# உரைநடை

## இயல் - 1 என்னுயிர் என்பேன்

## [ பேச்சு மொழியும் கவிதை மொழியும ]

1. பேச்சு மொழியும் கவிதை மொழியும் என்ற கட்டுரையின் ஆசிரியர் - இந்திரன்கலைகளின் உச்சம் - **கவிதை**

2. கவிதையை பேசுவது போல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்குஎழுத்தாளர்கள் செய்யும் கடமை என்று கூறியவர் - **மகாகவி பாரதி**

3. மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் உலகம் என்பதும் நான் என்பதும் தனித்தனியாகப்பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன என்று கூறியவர் -**எர்னஸ்ட் காசிரர்**

4. முகத்தின் தசை நார்ச்சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் என்னுடைய **மொழி** வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன

5. மொழி வழியாக ஒன்றைப் **பெயரிட்டு** அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் **பொருளின் மீது** எனக்கொரு அதிகாரம் வந்துவிடுவதை உணர்கிறேன்

6. எழுத்து மொழியைக் காட்டிலும் **பேச்சுமொழி** உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது

7. கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல்அமைக்கின்றனர். இதை **நேரடி மொழி** எனக் கருதுகின்றனர்

8. நேரடி மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா? இறந்தகாலத்தவரா? என்பதைநிர்ணயிக்கிறது என்று கூறியவர் மலையாளக் **கவி ஆற்றூர் ரவிவர்மா**

9. கவிதையின் உடம்பின் மேல் தோல் போல் இயங்குவது – **பேச்சு மொழி.**

10. கவிதையின் உணர்வை உணர்ச்சியற்ற ஆடை போல் போர்த்தி மூடி விடுவது – **எழுத்துமொழி**

11. பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்கள் எத்தனை பேர் - **3பேர்**

**1. வால்ட் விட்மன்**

**2. பாப்லோ நெருடா**

**3. கவிஞர் மல்லார்மே**

12. எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லை விட முக்கியமானதாகி விடுவதில்லை என்றுகூறியவர் - **வால்ட்விட்மன்**

13. பேச்சு எதிராளியை விளித்துப் பேசுவது அன்று ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப்பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக்கொள்கிறது

– **கவிஞர் மல்லார்மே**

செ. முத்துசாமி.எம்.ஏ.,பி.எட்.

14. குறியீடுகளின் கூட்டம் ஒரு முனையிலும், மொழி மறுமுனையிலும் இருக்கையில்கவிதையின் பேச்சு, இடையில் இருக்கும் வெளியில் புழுங்குகின்றது என்று கூறியவர் -**கவிஞர் மல்லார்மே**

15. குறியீடுகளின் கூட்டம் என்பது பொருளைப் பதிவு செய்வதன்று நினைவு கூறத்தக்கதருணங்களைப் பதிவு செய்வதாகும் என்று கூறியவர் - **கவிஞர் மல்லார்மே**

16. ஸ்பானிஷ்மொழிக் கவிஞர் - **பாப்லோ நெரூடா**

17. ஒரு கவிதை ஒரு பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அ∴து அப்பொருளைப்பற்றியது அன்று. அது வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறது என்றுகூறியவர் - **பாப்லோ நெரூடா**

18. கவிதை என்பது ஒரு பொருளன்று. அது மொழிக்குள் உலகையும் உலகிற்குள்மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச்செயல்பாடு என்று கூறியவர் - **பாப்லோ நெரூடா**

19. வால்ட் விட்மன் எந்த நாட்டைச் சேர்ந்தவர் - **அமெரிக்கா**

20. புதுக்கவிதை இயக்கத்தை தோற்றுவித்தவர் - **வால்ட் விட்மன்**

21. 'புல்லின் இதழ்கள்" என்ற நூலின் ஆசிரியர் - **வால்ட் விட்மன்**

22. ஸ்டெ∴பான்மல்லார்மே எந்த நாட்டைச் சேர்ந்தவர் - **பிரெஞ்சு**

23. ஆங்கில ஆசிரியராக பணியாற்றியவர் - **மல்லார்மே**

24. இவரைப் புரிந்து கொண்டால் குறியீட்டியத்தையும் புரிந்து கொள்ள முடியும் யார் அவர் -**மல்லார்மே**

25. பாப்லோ நெரூடா எந்த நாட்டைச் சேர்ந்தவர் - **தென் அமெரிக்காவில்** உள்ள **சிலிநாட்டில்** பிறந்தவர்

26. இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர் - **பாப்லோ நெரூடா**

27. தன்னுடைய கவிதைக்களுக்காக 1971 – ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல்பரிசு பெற்றவர் - **பாப்லோ நெரூடா**
28. இராஜேந்திரன் என்னும் இயற்பெயர் கொண்டவர் - **இந்திரன்**
29. கலை விமர்சிகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர் எனப் பன்முகத் தன்மைகொண்டவர் - **இந்திரன்**
30. ஓரிய மொழிக் கவிஞர் - **மனோரமா பிஸ்வாஸ்**
31. **'பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்"** என்ற மொழிபெயர்ப்புநூலுக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர் - **இந்திரன்**
32. முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள் கவிதை தொகுப்புகளின் ஆசிரியர் - **இந்திரன்**
33. தமிழ் அழகியல், நவீன ஓவியம் உள்ளிட்ட கட்டுரை நூல்கள் எழுதியவர் - **இந்திரன்**
34. இந்திரன் நடத்திய இதழ்கள் - **வெளிச்சம், நுண்கலை**
35. வால்ட ˙விட்மன் கவிதையை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் - **சர்கர்ஜெயராமன்**
36. மல்லார்மே கவிதையை பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் -**வெ.ஸ்ரீராம்**
37. பாப்லோ நெரூடா கவிதையை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் -**ஆ. இரா. வெங்கடாசலபதி**
38. தமிழின் கவிதையியல் என்ற நூலை எழுதியவர்- **கா. சிவத்தம்பி.**

செ.முத்துசாமி.எம்.ஏ.,பி.எட்.

# நம்மைஅளப்போம்

## இயல் -1 என்னுயிர் என்பேன்

1. பேச்சுமொழியும் கவிதைமொழியும் - **இந்திரன்**

யுகத்தின் பாடல் - **சு. வில்வரத்தினம்**

நன்னூல் பாயிரம் - **பவணந்திமுனிவர்**

ஆறாம் திணை - **அ. முத்துலிங்கம்**

2. கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும் காலத்தால் சாகாததொல்

கனிமங்கள் - அடிமோனை **கபாடபுரங்களை - காலத்தால்**

3. பாயிரம் இல்லது **பனுவல்** அன்றே

4. ஒருதிரவநிலையில் ,நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து

கொள்ளும்எனது மொழி ,எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிற

போது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை

அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து -

**எழுத்து மொழியை விடபேச்சு மொழி எளிமையானது.**

5. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க

**- அன்னம்,கிண்ணம்.**

செ.முத்துசாமி.,எம்.ஏ.,பி.எட்.

# இலக்கணம்

## இயல் - 1 மொழி முதல், இறுதி எழுத்துகள்

1) சொற்கள் எதனால் ஆனவை – **எழுத்தொலிகளால்**

2) சொற் புணர்ச்சியில் எவ்வகை எழுத்துகள் சந்திக்கின்றன – முதல் சொல்லின் **இறுதி எழுத்தும்**, முதல் சொல்லின் **முதல் எழுத்தும்**

3) காவிரி, டமாரம்,றெக்கை, பாரதி, ராக்கி, கோதை, டப்பா போன்ற சொற்களில் எவை தமிழ்ச் சொற்கள் - **காவிரி, கோதை**

4) மொழி முதல் எழுத்துகள் - **22**

5) உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்

**அ,ஆ, இ,ஈ, உ,ஊ, எ,ஏ,ஒ,ஓ, ஔ**

6) மெய்யெழுத்துகள் முதலில் வரும் எழுத்துகள் -

**க,ங,ச,ஞ,த,ந,ப,ம,ய,வ**

7) ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது – ∴ **(ஆய்த எழுத்து)**

8) சுட்டெழுத்துகள் - **அ,இ,உ**

9) வினா எழுத்துகள் - **எ, யா, ஆ, ஓ, ஏ** இதில்-

**எ, யா** - சொல்லிற்கு முதலில் வரும்

**ஆ, ஓ** - ஈற்றில் வரும்

**ஏ** - இரண்டு இடத்திலும் வரும்

10) தற்போது தமிழகத்தில் வழக்கில் இல்லாத சொல் - உங்ஙனம் இன்னும் உங்கு **உங்ஙனம்**என்ற சொற்களைப் பயன்படுத்தி வருபவர்கள் - **இலங்கைத்தமிழர்.**

செ.முத்துசாமி.,எம்.ஏ.,பி.எட்.

11) மொழி இறுதி எழுத்துகள் - **24**

12) உயிரெழுத்துகள் -12 சொல்லின் இறுதியில் வரும்

**-அ, ஆ. இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ,ஓ, ஔ**

13) மெய்யெழுத்துகள் - 11சொல்லின் இறுதியில் வரும் -

**ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ்,ள்**

14) குற்றியலுகரம் - **சொல்லின் இறுதியில்** வரும்

15) சொல்லின் இறுதியில் வராத சொற்கள் -

**க், ச், ட், த், ப், ற்** - வல்லின மெய் ஆறு - **ங்** மெல்லினம் வராது

16) இரண்டு சொற்களின் சேர்க்கைக்கு எடுத்துகாட்டு தருக.

தமிழ்-அரசி **---- தமிழரசி** நாடு-பண்----- **நாட்டுப்பண்**

17) சொல்லின் முதலில் நிற்கும் சொல் - **நிலைமொழி**

அதனோடு வந்து சேரும் சொல் - **வருமொழி**

18) நிலைமொழியும், வருமொழியும் இணைவது - **புணர்ச்சி**

19) நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும்வடிவம் உயிர் என்பதால் - **அது உயிரீறு எனப்படும்**

20) உயிரீறு எடுத்துகாட்டு தருக.----- **மணிமாலை**

21) நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது - **மெய்யீறு** எனப்படும்

22) மெய்யீறு எடுத்துகாட்டு தருக.------ **பொன்வண்டு**

23) உயிர் முதல் எழுத்துக்கு எடுத்துக்காட்டு தருக.----**வாழையிலை**

செ. முத்துசாமி.,எம்.ஏ.,பி.எட்.,

24) **மெய்ம் முதல் எழுத்துக்கு எடுத்துக்காட்டு தருக.**

வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும்வடிவம் 'மெய்" என்பதால் அது **'மெய்ம்முதல்"** எனப்படும்

25) சொற்புணர்ச்சியில் நிலைமொழி இறுதி எழுத்தாகவும், வருமொழி முதலெழுத்தாகவும்எழுத்துகள் சந்திக்கும் முறையை எத்தனை விதமாகப் பிரிக்கலாம - **நான்கு**

26) எழுத்துகளின் அடிப்படையில் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டுத் தருக.

- **மலையருவி**
- **தமிழன்னை**
- **தென்னை மரம்**
- **தேன்மழை**

27) ஈற்றெழுத்து , முதலெழுத்து நான்கு வகை

1. **உயிர் - உயிர்**
2. **மெய் - உயிர்**
3. **உயிர்- மெய்**
4. **மெய் - மெய்**

28) இலக்கண வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும் - **நான்கு**

**1)பெயர்ச் சொல் 2)வினைச் சொல் 3)இடைச் சொல் 4)உரிச் சொல்**

29) பெயரையும் , வினையையும் சார்ந்து வரும் சொற்கள் -

**இடைச்சொல் ,உரிச்சொல்.**

செ. முத்துசாமி.,எம்.,ஏ.,பி.எட்.

30) **சொற்களின் அடிப்படையில் புணர்ச்சி தொடர் வகை நான்கு வகைப்படும்**

**எ. காட்டு தருக.**

1. பெயர்ப் பெயர்த் தொடர் - **கனி (பெயர்) சாறு (பெயர்)**
2. பெயர் வினைத் தொடர் - **தமிழ் (பெயர்) படி (வினை)**
3. வினை வினைத் தொடர் - **நடந்து (வினை) செல் (வினை)**
4. வினைப் பெயர்த் தொடர் - **படித்த (வினை) நூல் (பெயர்)**

31) சார்பெழுத்துகளுள் **ஆய்தம்** சொல்லின் முதலிலோ இறுதியிலோ வராது

32) குற்றியலுகரமும் , குற்றியலிகரமும் சொல்லின் **முதலில்** வாரா

33) குற்றியலுகரத்தின் வகை **-ஆறு**

34) குற்றியலுகரத்தின் **ஆறு வகைகள்** சொல்லின் **இறுதியில்** வருகின்றன

35) குற்றியலுகர ஈற்றுடன் வரும் நிலைமொழி **குற்றியலுகர ஈறு** (அ) **குற்றியலுகரநிலைமொழி** எனப்படும்

36) குற்றியலுகர வகைகள்:

1) **நெடில் தொடர் குற்றியலுகரம்**
2) **உயிர்த் தொடர் குற்றியலுகரம்**
3) **வன்தொடர்க் குற்றியலுகரம்**
4) **மென்தொடர்க் குற்றியலுகரம்**
5) **இடைத்தொடர் குற்றியலுகரம்**
6) **ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.**

செ. முத்துசாமி. எம்.ஏ., பி.எட்.

# துணைப்பாடம்

## இயல்-1 ஆறாம் திணை

1. ஆறாம் திணை ஆசிரியர் - **அ. முத்துலிங்கம்**
2. அ. முத்துலிங்கம் பிறந்த ஊர் - **யாழ்ப்பாணம் அருகில் கொக்குவில்**
3. அ. முத்துலிங்கம் தற்போது வசிக்கும் ஊர் - **கனடா**
4. அ. முத்துலிங்கத்தின்சிறுகதை தொகுப்புகள் - **அக்கா, மகாராஜாவின் ரயில் வண்டி, திகட சக்கரம், வம்சவிருத்தி. வடக்கு வீதி**
5. 'வம்ச விருத்தி" எனும் நூலுக்காக தமிழக அரசின் பரிசினை 1996-ஆம் ஆண்டு பெற்றவர் -**அ. முத்துலிங்கம்**
6. வடக்கு வீதி எனும் சிறுகதைத் தொகுப்புக்காக இலங்கை அரசின் சாகித்தியஅகாடமி பரிசு பெற்றவர் - **அ. முத்துலிங்கம்**
7. பனியும் பனி சார்ந்த இடம் -**ஆறாம் திணையாகும்**.
8. தமிழர்கள் **எட்டுகோடி** மக்கள் வாழ்கிறார்கள் **நியூலாந்து** முதல் **அலாஸ்கா** வரை.
9. கனடாவில் **மூன்றுலட்சம்** மக்கள் வாழ்கிறார்கள்.
10. கனடாவில் வீதி ஒன்றுக்கு **வன்னி வீதி** என்று பெயரிட்டனர்.

செ. முத்துசாமி.,எம்.,ஏ., பி.எட்.,

செ. முத்துசாமி.,எம்.,ஏ., பி.எட்.,
முதுகலைத்தமிழாசிரியர்,
ஜீ.ஆர் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி,
முத்துநாயக்கன்பட்டி.
**செல்பேசிஎண் : 9994966232**